ஓட்டமாவடி மஜ்மா நகர் கொரோனா மையவாடி பள்ளிவாசல், பல்துறை கட்டடம் திறப்பு

ஓட்டமாவடி, மஜ்மா கிராமத்தில் பள்ளிவாசலுடன் கூடிய பல்துறைக் கட்டடம் இன்று திறந்து வைக்கப்படுகிறது.

கடந்த 2019 ஆம் ஆண்டு இறுதிப் பகுதியில் கொரோனா என்ற கொடிய வைரஸ் உலகைத்தையே அதிர வைத்ததை நாம் அறிவோம். இதனால் பல ஆயிரக்கணக்கான மனித உயிர்கள் பலியாகின. அதற்கு இலங்கைத் தீவும் விதிவிலக்கல்ல. ஆனால் ஒரு வித்தியாசம்.

கொரோனா தொற்றினால் மரணமானவர்களின் பூதவுடல்கள் உலக நாடுகள் அனைத்தும் ஒரு முகப்பட்டு அவரவர்கள் விருப்பத்துக்கேற்ப அடக்கமோ அல்லது தகனமோ செய்வதற்கு சுதந்திரம் வழங்கப்பட்டது. ஐக்கிய நாடுகள் சபையின் உலக சுகாதார ஸ்தாபனமும் இதனையே அங்கீகரித்திருந்தது.

ஆனால், அப்போதிருந்த அரசும் சில அதிகாரிகளும் கொரோனா தொற்றினால் உயிரிழந்தவர்களை கட்டாயமாக தகனம் செய்ய வேண்டும் என்ற உத்தரவை பிறப்பித்திருந்தது. இச்செயற்பாடானது இஸ்லாமிய சமய அனுஷ்டானத்துக்கு பெரும் பாதிப்பாக இருந்தது.

இந்நிலையில், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு முஸ்லிம்களதும் முஸ்லிம் நலன் விரும்பிகளதும் தகனத்துக்கெதிரான பலத்த எதிர்ப்புகளால் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை நிபந்தனைகளுடன் நல்லடக்கம் செய்வதற்கு அரசு முடிவெடுத்தது. அந்த நிபந்தனையே நிலத்தடி நீர் குறிப்பிட்ட ஆழத்துக்குக் கீழ் உள்ள பகுதியான கிழக்கிலங்கையின் ஓட்டமாவடி நகர் குறிப்பிடப்பட்டிருந்தது. இவ்வாறு இன்னும் பல பகுதிகள் காணப்பட்ட போதிலும் முஸ்லிம் அல்லாத பிற சமூகத்தவர்கள் பின் வாங்கும் நிலையில் முழுக்க முழுக்க முஸ்லிம் பிரதேசமே கைகொடுத்தது. அதுவே ஓட்டமாவடியிலுள்ள மஜ்மா கிராமமாகும்.

சுமார் 17 ஏக்கர் விஸ்தீரணமுள்ள மையவாடிக்குரிய காணி குறித்த பிரதேச மக்களாலேயே அன்பளிப்புச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. மஜ்மா மையவாடியின் தோற்றம், இப்போது நிர்மாணிக்கப்பட்டுள்ள பள்ளிவாசல், பல்துறை கட்டட தொகுதி என்பன இலங்கை வரலாற்றின் ஒரு மைல் கல்லாக நிச்சயம் பதியப்படும் என்பதில் ஐயமில்லை.

இலங்கை முஸ்லிம்களின் ஆரம்ப குடியேற்றம், வளர்ச்சி, வரலாற்றோடு மஜ்மா நகரும் வருங்கால சந்ததியினருக்கு வரலாற்று சான்றுகளாக இருக்கும்.

கொரோனா பூதவுடல்களை சுமக்கும் மஜ்மா மையவாடி

மஜ்மா நகர் ஜன சஞ்சாரமற்ற ஒரு வனப்பகுதியாகும். சந்தர்ப்ப சூழ்நிலையால் அப்பகுதி மையவாடியாக்கப்பட்டாலும் ஒரு பாரிய நகரமாக பரிணமிக்கப் போகிறது என்பதை எண்ணும் போது, துரதிர்ஷ்ட நிகழ்வுகள் அதிர்ஷ்டம் தரும் அரிய



நிகழ்வுகளில் ஒன்றாக அமையக் கூடும். நாடு கடத்தப்பட்ட ஒராபிபாஷா இலங்கை முஸ்லிம்களின் கல்விக் கண்களை திறந்த நிகழ்வு போன்றதாகும்.

17 ஏக்கர் நிலப்பரப்பில் சுமார் 3634 பூதவுடல்கள் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளன. அவற்றுள் 2956 ஜனாஸாக்கள் முஸ்லிம்களுடையதாகும்.

மஜ்மா மையவாடி பள்ளியின் தோற்றமும் பின்னணியும்

2956 முஸ்லிம் ஜனாஸாக்களில் பேருவளை சீனன்கோட்டையைச் சேர்ந்த மஹ்மா ஹாஜியானி இரீபதுல் ஹைரா சவாஹிரின் ஜனாஸாவும் அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளது. குறிப்பிட்ட ஜனாஸா அடக்கஸ்தலத்துக்கு கிரமமாக இலக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த வகையில் இரீபதுல் ஹைராவின் அடக்கஸ்தலத்துக்கு 3330 ஆம் இலக்கம் வழங்கப்பட்டுள்ளது. இவர், ஜனாஸா எரிப்பின் பின்னர் நல்லடக்கம் செய்ய அனுமதி வழங்கப்பட்ட இறுதிக் காலகட்டத்தில் மஜ்மா மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

இவரின் ஞாபகார்த்தமாகவே அவரது கணவர் ஏ.இஸட்.எம். சவாஹிர் ஹாஜியார் மற்றும் அவரது பிள்ளைகளினால் பைதுல் ஹைராத் என்ற பெயரில் அழகிய தோற்றத்துடன் சகல வசதிகளும் கொண்ட பள்ளிவாசலும் அதனுடன் கூடிய பல்தேவைக் கட்டிடங்களும் நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன. சுமார் 140×40 சதுர அடி நிலப்பரப்பில் இக்கட்டடம் அமையப்பெற்றுள்ளது. இக்கட்டடமே இன்று (2024-10-01) அஸர் தொழுகையைத் தொடர்ந்து திறந்து வைக்கப்படவுள்ளது.

இம்மையவாடியைத் தரிசிக்க வரும் சகல இன, மத மக்களும் பயன்படுத்தக்கூடிய வகையிலே இக்கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

பள்ளிவாயல் திறப்பு விழாவையடுத்து கொரோனாவினால் மரணித்தவர்களுக்காக கத்தமுல் குர்ஆன் தமாம், யாஸீன் ஸூறா ஓதுதல் மற்றும் துஆப்

பிரார்த்தனை என்பன இடம்பெறும்.

நிகழ்வில் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமா சபையின் செயலாளர் அர்கம் நூராமித், பொருளாளர் கலாநிதி அஸ்வர் அஸாஹிம் (அல்-அஸ்ஹரி), முஸ்லிம் சமய கலாசார திணைக்களப் பணிப்பாளர் எம்.எஸ்.எம்.நவாஸ் ,முனீர் முளப்பர் (நளீமி), பிரதேச அரசியல்வாதிகள், ஓட்டமாவடி மற்றும் வாழைச்சேனை உட்பட அதனை அண்டிய பகுதிகளைச் சேர்ந்த பள்ளிவாயல்கள் சம்மேளன நிர்வாகிகள், கோரளைப்பற்று மேற்கு பிரதேச சபையின் செயலாளர் , ஊழியர்கள்,ஊர்த் தலைவர்கள், மட்டக்களப்பு மாவட்ட ஜம்இய்யத்துல் உலமா சபை முக்கியஸ்தர்கள், சீனன்கோட்டை பள்ளிச்சங்கத் தலைவர் ஏ.எச்.எம் முக்தார் , உறுப்பினர்கள், ஏ.இஸட்.எம். ஸவாஹிர் ஹாஜியாரின் குடும்ப அங்கத்தவர்கள், உலமாக்கள் மற்றும் புத்திஜீவிகள் எனப் பலர் கலந்து கொள்வர்.

மர்ஹூமா ஹாஜியானி இரீபதுல் ஹைரா

பேருவளை, சீனன்கோட்டையைச் சேர்ந்த பிரபல மாணிக்கக்கல் வர்த்தகர் மர்ஹூம் அப்துல் வதூத் மர்ஹூமா ஜெமீலா உம்மா தம்பதியின் புதல்வியாக 1961-12-13 ஆம் திகதி ஹாஜியானி இரீபதுல் ஹைரா பிறந்தார்.

இந்நிலையில் 1977-11-05 ஆம் திகதி பிரபல மாணிக்கக் கல் வர்த்தகரான மர்ஹூம் அஹமட் ஸரூக் ,மர்ஹூமா ஹக்கீகத் உம்மா தம்பதியின் புதல்வரான ஏ.இஸட்.எம் சவாஹிரை திருமணம் செய்தார்.

பாத்திமா ஸுமையா, பாத்திமா றிஸ்னா, ரஹ்மத் ஹாமிதா, முஹம்மத் அஹ்ஸர், முஹம்மத் ரிகாஸ் ஆகியோர் இவரின் அன்பு பிள்ளைகளாவர். மர்ஹூமா இரீபதுல் ஹைராவுக்கு 15 பேரப் பிள்ளைகளும் உள்ளனர்.

இவர் தக்வாவும் இஹ்லாஸும் உள்ள ஓர் அடக்கமான இஸ்லாமிய பெண்ணாக வாழ்ந்துள்ளார். நாட்டுக்கும் சமூகத்துக்கும் ஊருக்கும் நல்ல பல சேவைகளை செய்யக் கூடிய பிள்ளைகளாக தமது பிள்ளைகளை வளர்த்துள்ளார். தனது கணவர், பிள்ளைகள் சமூக விமோசனத்துக்காக வாரி வாரி வழங்குவதற்கு உற்சாக மூட்டியவர்.

சிரித்த முகத்துடன் வீடு வந்தோரை வரவேற்று விருந்துபசாரம் வழங்குவதில் கைதேந்தவர். குடும்ப உறவைப் பேணி நடந்தார். செல்வம் நிறைந்திருந்தாலும் சாதாரண பெண்ணாக வாழ்ந்து முன்மாதிரி காட்டினார்.

60 ஆவது வயதில் 2022-01-10 ஆம் திகதி கொழும்பில் உள்ள தனியார் வைத்தியசாலையில் மாலை 7.40 மணிக்கு இறையடி சேர்ந்தார். இவரது ஜனாஸா 2022-01-11 ஆம் திகதி ஓட்டமாவடி மஜ்மா நகர் கொரோனா மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது. இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிஊன்.

யா அல்லாஹ்! இவர் செய்த அத்தனை நற்காரியங்கள், நல்ல அமல்களை அங்கீகரித்து ஜன்னதுல் பிர்தௌஸ் எனும் சுவர்க்கத்தை வழங்குவானாக, ஆமீன்.

கோரளைப்பற்று மேற்கு பிரதேச சபை ஊழியர்களின் பணி

ஓட்டமாவடி மஜ்மா நகர் கொரோனா ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதில் இரவு பகல் பாராது சேவையாற்றிய கோரளைப்பற்று மேற்கு பிரதேச சபை ஊழியர்களை கௌரவித்து சீனன்கோட்டையைச் சேர்ந்த மர்ஹூமா இரீபதுல் ஹைராவின் குடும்பத்தரால் ஞாபகார்த்த சின்னமும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கொரோனாவில் மரணித்தவர்களை அடக்கம் செய்த இந்த மஜ்மா நகர் மையவாடி பின்னர் காடுகள் வளர்ந்து காணப்பட்டது. அதனையும் கூட சவாஹிர் ஹாஜியார் குடும்பத்தினர் தமது சொந்த செலவில் சுத்தம் செய்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கொரோனா ஜனாஸாக்களுக்காக பிரார்த்தனை செய்ய குடும்ப அங்கத்தவர்கள் தினந்தோறும் தூர இடங்களிலிருந்து வருகின்றனர். அதே போல் பிற, மத சகோதரர்களும் சமூகமளிக்கின்றனர். இவர்களுக்கு ஓய்வெடுக்க கூடிய வசதி வாய்ப்புகள் இங்கு போதியளவு இருக்கவில்லை.

இதை அறிந்த சவாஹிர் ஹாஜியாரும் அவரது குடும்பத்தினரும் பள்ளிவாசலையும் பல்துறை கட்டட வசதியையும் அமைத்துள்ளனர். இவர்களின் இந்த உயரிய பணியை பாராட்ட வேண்டும். இவர்களுக்கு நன்றி கூறி துஆவும் செய்ய வேண்டும்.

பள்ளிவாசலும் பல்துறை கட்டிடமும் மலசலகூட வசதியும் அமைக்கப்பட்டதன் மூலம் மஜ்மா நகர் மையவாடியானது மேலும் புதுப் பொலிவு பெற்றுள்ளன.

இப்பணியை சிறப்பாக முன்னெடுக்க ஊர் மக்கள், கிழக்கின் அரசியல்வாதிகள், கோரளைப்பற்று மேற்கு பிரதேச சபை முன்னாள் தலைவர் உட்பட உறுப்பினர்கள், செயலாளர் உட்பட ஊழியர்கள், அரச அதிகாரிகள், பள்ளிவாசல் நிர்வாகிகள், பாதுகாப்பு பிரிவினர், உலமாக்கள், புத்திஜீவிகள் வழங்கிய ஒத்துழைப்பு மறக்க முடியாதது.

பீ.எம் முக்தார்

ஏ.இஸட்.எம்.சவாஹிர் ஹாஜியாரின் செய்தி

பேருவளை , சீனன்கோட்டையில் பிறந்த எனது மனைவி இரீபதுல் ஹைரா, கொரோனா தொற்றினால் ஏற்பட்ட மரணம் என்று தெரிவிக்கப்பட்ட காரணத்தினால் கிழக்கு மாகாணத்தின் மஜ்மா நகர் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டமை ஒருபுறம் மனதை உருத்தச் செய்தாலும், மறுபுறம் எரிக்கப்படுவது தவிர்க்கப்பட்டதற்கு, அல்லாஹ்வுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். மேலும் வனப்பகுதியொன்றில் பள்ளிவாசல் ஒன்று நிர்மாணிக்க கிடைத்தமையையிட்டு மேலும் மகிழ்ச்சியடைகிறேன். இவற்றுக்கெல்லாம் வழிவகுத்த அல்லாஹ்வுக்கே புகழனைத்தும் - அல்ஹம்துலில்லாஹ் என்று தனது ஆதங்கத்தை மர்ஹூமா இரீபதுல் ஹைராவின் கணவர் சவாஹிர் ஹாஜியார் வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

அன்று மனைவியின் ஜனாஸா மஜ்மா நகரில் நல்லாடக்கம் போன்ற காரணத்தினால் மனக்குழப்பத்தில் இருந்த எனக்கு மனைவியின் பெயரால் அங்கு பைத்துல் ஹைராத் நிர்மாணம் பெற்று திறந்து வைக்கப்படுவதால் மகிழ்ச்சிப் பிரவாகம் என்னுள் மேலோங்கி நிற்கிறது, எனது மனைவியின் நற்பண்பு, நற்பணிகளால் அவர் அப்போதே, அல்லாஹ்வுக்கு நெருக்கமானவராக விளங்கியுள்ளார். இப்போது அந்த நெருக்கம் மேலும் மேலோங்கச் செய்யும். எமது முயற்சிகளை அல்லாஹ் அங்கீகரிக்கப் பிராத்திக்கிறேன் .

இந்த பள்ளிக் கட்டடத்தின் தோற்றத்தால் இங்கு குடியிருப்புக்கள் பல்கிப் பெருகி பெரிய நகராக பரிணாமம் பெற அல்லாஹ் அருள்புரிய இருகரமேந்தி பிரார்த்தனை செய்கிறேன்.

இந்த உயரிய பணிக்காக அன்று முதல் இன்று வரை தியாகத்தோடு பங்களிப்புச் செய்த அனைவருக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி தெரிவிக்கின்றேன்.

அ.இ.ஜ. உலமாவின் வாழ்த்து

ஓட்டமாவடி, மஜ்மா நகர் மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ள பேருவளை, சீனன்கோட்டையைச் சேர்ந்த மர்ஹூமா ஹாஜியானி இரீபதுல் ஹைராவின் ஞாபகார்த்தமாக அவரின் கணவர் சவாஹிர் ஹாஜியார் மற்றும் அவர் பிள்ளைகளால் குறித்த மையவாடி காணியில் பள்ளிவாசலும் அதனுடன் கூடிய பல்துறை கட்டிடமும் நிர்மாணித்து இன்று மக்கள் பாவனைக்காக கையளிக்கப்படுகிறது. இது குறித்து நல்வாழ்த்துக்கள் தெரிவிப்பதில் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன் என்று அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா சபையின் பொருளாளர் கலாநிதி அஸ்வர் அஸாஹிம் (அல் அஸ்ஹரி – அஷ்ஷாதுலி) விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் கூறியுள்ளார்.

அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது,

மர்ஹூமா ஹாஜியானி இரீபதுல் ஹைரா தனது வாழ்வில் தர்மங்கள் செய்வதில் அர்ப்பணிப்போடு செயலாற்றியது போன்று தம் பிள்ளைகளையும் நற்பணி செய்வதில் ஆக்கமும் ஊக்கமும் ஊட்டி வளர்த்துள்ளார்.

மர்ஹூமா ஹாஜியானி இரீபதுல் ஹைராவின் கணவர், புதல்வர்கள் அன்னாரின் பெயரில் அன்பளிப்பாக செய்யக்கூடிய இந்த ஸதகதுல் ஜாரியாவை அல்லாஹ் ஏற்று அவர்களுடைய அடக்கஸ்தலத்தை சுவர்க்கத்தின் பூஞ்சோலையாகவும் ஒளிமயமாகவும் ஆக்கி அருள்புரிவதோடு அவரது கணவர், பிள்ளைகள் குடும்பத்தார் அனைவரையும் நற்பாக்கியம் பெற்றவர்களாகவும் சுவனத்தின் மாளிகையில் சொந்தக்காரர்களாகவும் ஆக்க அருள்புரிவானாக!

சதகத்துல் ஜாரியாவான இந்த தர்மத்தை எல்லாம் வல்ல அல்லாஹ் பொருந்திக் கொண்டு மர்ஹூமா இரீபதுல் ஹைராவின் கபுருலகை ஒளிமயமாகவும் சுவர்க்கத்து பூஞ்சோலையாகவும் ஆக்கியருள்வானாக ஆமீன்.

சீனன்கோட்டை பள்ளிச்சங்கத் தலைவர் அல்ஹாஜ் ஏ.எச்.ஏ.முக்தார் வாழ்த்து



கொவிட்-19 எனும் கொரோனா தொற்றுக்கு இலக்காகி 2022 ஆம் வருடம் 10ஆம் திகதி மரணமான சீனன்கோட்டையைச் சேர்ந்த ஹாஜியாணி மர்ஹூமா இரீபதுல் ஹைராவின் ஜனாஸா மஜ்மா நகர் கொரோனா மையவாடியில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

அவரது பெயரால் குறித்த மையவாடி காணியில் பள்ளிவாசலும் பல்துறை கட்டடமும் இன்று 01.10.2024 மக்கள் பாவனைக்காக திறந்து வைக்கப்படுவதையிட்டு அல்லாஹ்வை புகழ்வதோடு இந்த மேலான தர்மத்தை செய்துள்ள மர்ஹூமா இரீபதுல் ஹைராவின் கணவர் சவாஹிர் ஹாஜியாருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் ரசூல் ஸல்லல்லாஹி அலைஹி வஸல்லம் அவர்களின் பொன்மொழிக்கிணங்க நாளை மறுமையில் சுவர்க்கலோகத்தில் அழகிய மாளிகை கிடைக்கவும் பிரார்த்திக்கிறேன்.

இந்தக் குடும்பம் மேற்கொண்டுள்ள இந்த காரியத்தால் சீனன்கோட்டை பிரதேசம் பெரும் மகிழ்ச்சியடைகிறது. மக்கள் குடியிருப்புகள் இல்லாத மஜ்மா மையவாடி பிரதேசம் எதிர்காலத்தில் வீடுகளும் கடைகளும் நிறைந்த பெரிய நகராக பொலிவு பெறும் என்பதில் சந்தேகமில்லை. எனவே இலங்கை வரலாற்றிலும் குறிப்பாக முஸ்லிம்களின் வரலாற்றிலும் சிறப்பிடம் பெறப்போகிறது. இதிலும் பேருவளை சீனன்கோட்டையின் பெயரும் புகழும் மேலும் மெருகேற்றப்படுவதை நினைக்கும் போது மகிழ்ச்சி பிரவாகம் மேலும் ஊற்றெடுக்கவே செய்கிறது.

மர்ஹூமா இரீபதுல் ஹைரா, வரிய மக்களோடு நல்ல நேசம் வைத்திருந்ததை எமது பிரதேசத்தில் எல்லோரும் அறிவர். வசதி குறைந்த மக்களுக்கும் இன்முகத்துடன் உதவியுள்ளார். நூலை போல சேலை தாயைப் போல பிள்ளை என்பது போல அந்த தம்பதியின் பிள்ளைகளும் நற்பணிகளில் ஈடுபடுவதில் சளைத்தவர்கள் அல்ல என்பதற்கு இலக்கணமாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். எனவே ஆலமுல் பர்ஸஹ்வில் வாழ்ந்து கொண்டிருக்கும் இரீபதுல் ஹைராவுக்கு சதகதுல் ஜாரியாவின் நன்மைகள் நிறைந்து கொண்டிருக்கும் என்பதில் மாற்றுக்கருத்து இல்லை.